[24th March 1961

Sri K. B. S. MANI : சர்க்காரால் கொடுக்கப்படுகிற நிலங்களை சிலவிடங்களில் பக்கத்து நிலத்தின் சொந்தக்காரர்களான மிராசுதார்கள் அவைகளை மாற்றுப் பெயர்களில் தாங்களே ஆக்ரமித்துத் தங்களுக்கு சாதகமாக்கி தங்கள் நிலத்தோடு சேர்த்துக்கொண்டு வருவது சர்க்காருக்கு தெரியுமா ? அப்படித் தெரிந்தால் என்ன நடவடிக்கைகள் எடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

The Hon Sri M. A. MANICKAVELU : எப்படி எப்படி, எந்தெந்த இடங்களில் இப்படி சம்பவம் நடக்கிறது என்று தெரிந்தால் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Sri M. K. SOMASUNDARAM : நிலமற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய நிலத்தில் அவர்கள் பயிரிடுகிறார்களா, இல்லை சும்மா போட்டிருக்கிறார்களா ? சும்மா போட்டிருந்தால் அவர்கள்மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்க உத்தேசம் ?

The Hon Sri M. A. MANICKAVELU : நிலம் கொடுக்கிற விதி பிரகாரம், மூன்று வருடங்களுக்கு உள்ளாக சாகுபடி செய்யவேண்டும், இல்லையென்றால் நிலத்தைத் திருப்பி எடுத்துக் கொள்வது என்பது விதி.

Sri V. K. KOTHANDARAMAN : வால்யூபிள், நான்-வால்யூபிள் என்ற ஒரு நிர்ணயிப்பு இப்பொழுதேயிருக்கிறதா ? அல்லது அந்தந்த நிலத்தை வால்யூபிள் என்று சொல்லக்கூடிய நிலையில் அந்தந்த நிலத்திற்கு தகுந்தாற்போல் நிர்ணயிக்கப்படுகிறதா ?

The Hon Sri M. A. MANICKAVELU : இப்பொழுதே இருக்கிறது. நீர்ப்பாசன வசதி இல்லையென்றால், இல்லை.

Electric lights (Utharakosa Mangai)

* 1056 *Q.*—Sri K. VINAYAKAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state whether any request was made by the panchayat board of "Utharakosa Mangai" of Ramanathapuram district for the provision of electric lights in the streets?

The Hon. Sri V. RAMAIAH : Yes, Sir.

Sri K. VINAYAKAM : May I know the stage at which the proposition stands and when the Panchayat would get street lights?

The Hon. Sri V. RAMAIAH : The work will be taken up during the course of the next year.

Sri K. VINAYAKAM : What was the estimated amount that was demanded from this Panchayat Board and did the Panchayat tender that amount?

The Hon. Sri V. RAMAIAH : A scheme has been prepared and it is a feasible scheme and that is why I said that the work will be taken up during the next year.

Land ceiling (survey of lands)

* 1057 *Q.*—Sri S. M. ANNAMALAI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நிலத்திற்கு உச்சவரம்பு கட்டிய பிறகு எவ்வளவு நிலம் உபரியாகக் கிடைக்குமென்பதை சர்வே செய்ய உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன ?

24th March 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) & (இ) No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், இப்போது இருக்கிற மசோதாவானது 1960-ம் ஆண்டு எப்ரல்மீ 6உலிருந்தே அமல் செய்யப்போவதாக மசோதாவில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் எவ்வளவு நிலம் மிச்சப்படும் என்று ஏன் இந்த சர்க்கார் சர்வே செய்யக்கூடாது? இதைப்பற்றி பிளானிங் கமிஷன் ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிளானிங் கமிஷன் ஒன்றும் சொல்லவில்லை, மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம், அதன்படி என்னென்ன செய்யவேண்டுமோ அதை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. அதன் முன்னாலேயே இந்த விவரங்களை ஏன் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு பழமொழி சொல்லுவார்கள், "யார் வீட்டு ஆத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரிந்து போகும்" என்று . . . . . (பலத்த சிரிப்பு)

SRI K. VINAYAKAM : Is it a fact that there is a belief that there would be about two-lakh acres of land in excess of ceiling be available. Meanwhile, transactions have occurred. So there will be diminution in the extent of such lands.

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, by a rough survey it is expected that more than two-lakh acres of land will be available. Meanwhile, transactions have occurred. So there will be diminution in the extent of such lands.

SRI S. M. ANNAMALAI : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில் யார் வீட்டு ஆத்தாள் செத்தாலும் பொழுது விடிந்தால் தெரிந்து போகும் என்று தெரிவித்தார்கள். 1960-ம் ஆண்டு எப்ரல்மீ 6உலியே ஆத்தாள் செத்தாய்விட்டது, ஏன் இன்னும் பொழுதுவிடியவில்லை என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர் சொல்லுகின்ற பொழுது வேறாக இருக்கலாம். இந்த சட்டத்தைப் பொறுத்த அளவில் இன்னும் பொழுது விடியவில்லை.

Medals to Harijans Sevaks (Chengam taluk)

* 1058 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொதுமராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வடஆற்காடு ஜில்லா, செங்கம் தாலூக்காவில் ஹரிஜன சேவகர்கள் என்று எத்தனை பேருக்கு பதக்கங்கள் கொடுக்கப்பட்டன அல்லது கொடுக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது?

(இ) பதக்கம் கொடுப்பதற்கான சிபாரிசு செய்வது யார்? எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN : (அ) The Government have not yet received recommendations regarding the award of medals for the year 1960.

(இ) The recommendations are made by the Director of Harijan Welfare and the Collectors of the districts.

Class I medals are awarded to those who have done work like throwing open wells to Harijans, helping entry of Harijans into hotels, arranging marriage of Harijan girls or boys with other